DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.108/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அருண்குமார் ( சார்பு ஆய்வாளர்) (P.w.2) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of March 2026

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது திருச்சுழி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர் திரு.கெங்கராஜ், சார்பு ஆய்வாளர் திரு.முத்துகுமார் ஆகியோரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மு.நி.கா.1656 ரவிக்குமார் கடந்த 30.06.2023ம் தேதி 5.00 மணிக்கு நிலையபொறுப்பில் இருந்தபோது, சார்பு ஆய்வாளர் திரு.கெங்கராஜ் அவர்களின் உத்தரவுபடி, விருதுநகர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலின்படி, அங்கு சென்று சிகிச்சையிலிருந்த பனிக்குறிப்பு கிராமத்தைச் சேர்ந்த துரைராஜ் மனைவி பேச்சியம்மாள் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று, பின்னர் 6.30 மணிக்கு நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற

எண்.133/2023, இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார்வாக்குமூலம் ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களை கனம் நீதித்துறை நடுவருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2.சார்பு ஆய்வாளர் திரு.கெங்கராஜ் வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்கம், ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். (**அந்த பார்வைமகஜர் அ.சாஆ.4 மற்றும் மாதிரிவரைபடம் அ.சாஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவ சாட்சிகள் பிச்சையம்மாள், ராதா, மகாதேவி, ரவிசந்திரன், இந்திரா, அம்மாசியம்மன், தங்கம், ராமகிருஷ்ணன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து குவிமுச பிரிவு 161(3)–ன்படி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் காயம்பட்ட நபரான பேச்சியம்மாள் என்பவருக்கு முதலுதவி சிகிச்சையளித்த காரியாபட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.தனலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்றுகள் பெற்றுள்ளார். **(காரியாபட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் விபத்துபதிவேட்டில் வழங்கிய காயசான்று அ.சாஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது).** பின்னர் பேச்சியம்மாளுக்கு மேல்சிகிச்சையளித்த விருதுநகர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.தவசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்றுகள் பெற்றுள்ளார். **(விருதுநகர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் வழங்கிய காயசான்று அ.சாஆ.7 ஆக குறியிடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.முத்துகுமார் வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் உத்தரவு CRL OP (MD) No.12269/2023, நாள்.06.07.2023–ன்படி முன்பிணை பெற்று, 20.07.2023ம் தேதியன்று திருச்சுழி மாவட்டம் உரிமையியில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். பின்னர் மு.நி.கா.1656 ரவிக்குமார் மற்றும் முதல் கட்ட விசாரணை செய்ய மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.கெங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து 11.10.2023ம் தேதியன்று 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4–ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவு 323–ன் கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எ.த.கு.வி**

சார்பு ஆய்வாளர் சொன்ன நாள், நேரத்தில் புகார்வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருச்சுழி.